https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

03RD SEPTEMBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 43





# போலி தேரர்கள் களத்தில்...!!!



## 500 பேருக்கு பயிற்சி

## அரசியல் சூழ்ச்சிக்குத் தயார்

### புலனாய்வு அறிக்கையில் அம்பலம்

02



## விமல்-கம்மன்பில மீண்டும் மஹிந்த அணியில்...?

மொட்டு கூட்டணியில் இருந்து பிரிந்து சென்ற விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகிய இருவரையும் மீண்டும் மொட்டுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத்

02






## மைத்திரிக்கு இரகசிய கடிதம்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவராக இருந்து கட்சியை பலவீனப்படுத்திவிட்டார் என்று 7 முக்கிய குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கி மைத்திரிபால சிறிசேனவுக்கு ரகசிய கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொது செயலாளர் தயாசிறி ஜயசேகர.சிரேஷ்ட உப தலைவர் ஷான் விஜயலால், உப தலைவர் துஷ்மந்த மித்ரபால மற்றும் அங்கஜன் ராமநாதன் உள்ளிட்டவர்கள் அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.









புது சுடர்
www.puthusudar.lk
2023 SEPTEMBER 03 - SUNDAY

# சஜித்-ரணில் இணைவு சாத்தியமா?

பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதை விடவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதுதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு முக்கியமாக உள்ளது.

தேர்தலுக்கு சுமார் ஒரு வருடம் இருக்கின்றபோதிலும் இப்போதிருந்தே அதற்கான வேலைத்திட்டங்களை தொடங்கிவிட்டார் அவர்.

அரசியல் தீர்வை வழங்குகிறேன் என்ற போர்வையில் தமிழர்களின் வாக்குகளை சுருட்டுதல்,கூட்டணிகளை அமைத்தல்,மொட்டு கட்சியை உடைத்தல்,சஜித் தரப்பை பிரித்தல் என தேர்தலை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளைத்தான் காண முடிகிறது.

அந்த வகையில்,இந்த வாரம் பேசத் தொடங்கியுள்ள விடயம் என்னவென்றால் சஜித்--ரணில் இணைவுபற்றித்தான்.

இந்த இணைவு சாத்தியமானால் வெற்றியும் சாத்தியம் என்றே கூறலாம். ஆனால்,இணைவுக்கு வாய்ப்பில்லை.

2019 ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய மொட்டு கட்சியின் வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிடுவதென்றால் அது ரணிலால் முடியாது.சஜித்தாலேயே முடியும் என்று மக்கள் கருதியதால் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் சஜித் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

கோத்தா 69 லட்சம் வாக்குகளை பெற்று வெற்றிபெற்றபோதிலும்,சஜீத்தால் 55 லட்சம் வாக்குகளையேனும் பெற முடிந்தமை அன்றைய காலகட்டத்தில் பெரிய விடயம் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் அந்த எண்ணிக்கை சஜித்துக்கு அதிகரிப்பதற்கும் வெற்றிபெறுவதற்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

வெற்றியின் பக்கம் நெருங்கியுள்ள இத்தருணத்தில் சஜித் ரணிலுடன் இணைந்து அந்த வெற்றியை அநியாயமாக இழப்பாரா?

ரணிலை ஜனாதிபதியாகவும் சஜித்தை பிரதமராகவும் ஆக்கும் ரணிலின் திட்டத்துக்கு சஜித் தரப்பில் இருந்தே சிலர் துணைபோகின்றனர்.

அவர்கள் இருவரும் இணைய வேண்டும் என்ற பொதுநல சிந்தனையுள்ளவர்கள் அல்லர். அவர்கள் ரணிலின் ஒற்றர்கள்.

சஜித் இணைந்தால் சஜித்துக்கு என்ன நடக்கும் என்று எல்லோருக்கும் தெரியும்.சஜித்தை அருகில் எடுத்து அப்படியே அழித்துவிடுவார் ரணில்.

தன்னை ஜனாதிபதியாக்கிய மொட்டு கட்சிக்கு அவர் செய்வதைப் பாருங்கள். அந்தக் கட்சியை இரண்டு,மூன்று துண்டுகளாக உடைத்துவிட்டார். அதில் பெரிய துண்டை தன்னோடு இணைத்துக்கொள்வதற்குத் திட்டமிட்டுதான் மொட்டு கட்சியின் நிமால் லான்ஸாவை வைத்து கூட்டணி ஒன்றை உருவாக்கி வருகிறார் ரணில்.

மொட்டில் இருந்து எப்படியும் 40 பேரை இழுத்தெடுப்பேன் என்று ரணிலுக்கு வாக்குறுதியளித்துள்ளார் லான்ஸா.இதில் லான்ஸாவும் பிரசன்ன ரணதுங்கவும் தீவிரமாக இறங்கியுள்ளார்கள்.

இப்படி தன்னை ஜனாதிபதியாக்கிய கட்சிக்கே துரோகம் செய்யும் ரணில் ,தன்னை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடித்த சஜித்தை மாத்திரம் விட்டுவைப்பாரா?

சஜித்தின் வளர்ச்சி ரணிலுக்கு என்றுமே ஆபத்துதான்.இதனால் சஜித்தை அருகில் எடுத்து அழிப்பதுதான் ரணிலின் திட்டம்.

இந்தத் திட்டத்துக்கு சஜித் என்றுமே துணைபோகமாட்டார்.தனது கழுத்தை அறுக்கும் கத்தியை அவரே தீட்டிக் கொடுப்பாரா?

## போலி...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அரசியல் சூழ்ச்சிகளில் ஈடுபடுத்துவதற்காக போலி தேரர்கள் 500 பேர் சிலரால் தயார்படுத்தப்படுகிறார்கள் என்று அரச புலனாய்வு பிரிவு அரசுக்கு தகவல் வழங்கியுள்ளது.

18 வயது முதல் 20 வயது வரையான இளைஞர்கள் இதற்கென தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டுக்கொண்டு வருகிறார்கள் என்றும் ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றில் அவர்களை தேரர்கள்போல் இறக்கி அரசியல் இலாபம் அடைவதே இதன் திட்டம் என்றும் அந்த புலனாய்வு அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

ஆர்ப்பாட்டம்,ஊர்வலம் போன்றவற்றில் இந்த போலி தேரர்களை இறக்கப்படுவர். அவர்கள்மீது பொலிஸார் தாக்குதல் நடத்தும்போது அதை வைத்து அரசியல் இலாபம் அடைவதுதான் திட்டமாம்.

அரசியல் கட்சி ஒன்றுதான் இந்தத் திட்டத்தின் பின்னணியில் உள்ளது என்று அந்த புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விமல்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்கள் இருவரையும் இணைப்பதற்கான நடவடிக்கையை உடன் மேற்கொள்ளுமாறு மொட்டு கட்சி முக்கியஸ்தர்கள் மஹிந்த ராஜபக்ஸ விடம் கோரிக்கை முன்வைப்பதற்குத் தயாராகின்றனர்.

அவர்களை வளைப்பதற்கான திறமை மஹிந்தவிடமே உள்ளது என்று மொட்டு கட்சி உறுப்பினர்கள் நம்புவதால் அந்தப் பொறுப்பை மஹிந்தவிடம் ஒப்படைப்பதற்கு முடிவெடுத்துள்ளனர்.

# ரணிலுடன் இணைய வேண்டாம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பதால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணையும் தீர்மானத்தை எடுக்க வேண்டாம் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள்-ஆதரவாளர்கள் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசாவுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி தகவல்கள் கூறுகின்றன.

இணைவானது ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தடுப்பதற்கான ரணிலின் சதி என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை,கட்சிக்குள் இருந்து சிலர் ரணிலுடன் இணையுமாறு சஜித்துக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருந்தும், ரணிலுடன் இணைவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டிலேயே சஜித் உள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரம் கூறுகிறது.

# சு.கவின் 72ஆவது சம்மேளனக் கூட்டம் இன்று




ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 72ஆவது சம்மேளனக்கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் தலவதுகொடவில் இடம்பெறுவுள்ளது.

இந்தக் கூட்டத்தை குருநாகல் ஹெட்டிபொலவில் நடத்துவதற்கே முதலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டின் எல்லா பகுதிகளில் இருந்தும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்துகொள்வது சிரமம் என்பதால் அது தலவத்துகொடவிற்கு மாற்றப்பட்டுள்ளது என்று கட்சி தெரிவித்துள்ளது.

# பெற்றோல் ஒரு லீற்றருக்கு ரூ.150 வரி

விலை சூத்திரத்துக்கு ஏற்ப பெற்றோலின் விலை அதிகரிக்கப்படவில்லை என்றும் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 150 ரூபாவுக்கும் அதிகமாக வரி அறவிடப்படுகிறது என்றும் சம்பிக்க ரணவக்க எம்பி கூறியுள்ளார்.

சர்வதேசத்தில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படாத நிலையிலும் டொலரின் பெறுமதி அதிகரிக்கப்படாத நிலையிலுமே எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று அவர் குற்றம் சுமத்துகிறார்.

அரசு எரிபொருட்களின் விலைகளை அதிகரித்து அநியாயமாக மக்களின்மீது சுமையை ஏற்றுகிறது என்று கூறிய சம்பிக்க உடனடியாக எரிபொருட்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார்.

# கொழும்பிலேயே இருங்கள்: எம்பிக்களுக்கு உத்தரவு



சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக இன்னும் மூன்று நாட்களில் நாடாளுமன்றில் நம்பிக்கை இல்லா பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதால் மொட்டு கட்சி எம்பிக்கள் எவரும் கொழும்பை விட்டுப் போகக்கூடாது என்று அக்கட்சி கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்தப் பிரேரணையக் கொண்டுவரும் ஐக்கிய மக்கள் சக்தி எப்படியாவது இதை வெற்றிபெற வைக்க வேண்டும் என்று ஓடித்திரிகிறது.

அதேவேளை,அமைச்சருக்கு எதிராக நாடுபூராகவும் மக்களிடம் இருந்து கையெழுத்துக்களைத் திரட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# மு.கா ஸ்தாபத் தலைவர் அஸ்ரப் நினைவு தின கலந்துரையாடல்





(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் அமைச்சரும், மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ ின் ஸ்தாபக தலைவருமான எம். எச்.எம் அஸ்ரப் அவர்களின் 23 வது நினைவு தினம் எதிர்வரும் செப்டம்பர் 16ம் திகதி சாய்ந்தமருதில் அனுஸ்டிக்கப்படவுள்ளது. அது தொடர்பாக அம்பாறை மாவட்ட பல்வேறு பிரதேசங்களினதும் மத்திய குழு உறுப்பினர்களுடனான கலந்துரையாடல்கள் அம்பாறை மாவட்டம் பூராக நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக கல்முனையில் இது சம்பந்தமான கூட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரிஸ் தலைமையில் கல்முனை காரியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ ின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான சட்டமானி ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். மேலும் இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். சி எம் பைசல் காசிம், முன்னாள் பிரதியமைச்சர் எம்.எஸ். தௌபீக், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம் ஐ எம் மன்சூர் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர்.





வவுனியா, அரபா நகர் குடியேற்ற கிராமத்தின் 25 வருடப் பூர்த்தியை முன்னிட்டு, ஊர் மக்களின் ஏற்பாட்டில், வெள்ளி விழா விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சி ஆகியன, கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) அரபா நகர் பிரதேசத்தில் இடம்பெற்றன. இந் நிகழ்வுகளில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக வவுனியா மாவட்ட உதவி உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ரதீஷ் மற்றும் ருனே௺ பணிப்பாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர்.








## 13ஐ ரணில் ஒருபோதும் அமுல்படுத்தமாட்டார்:

# மொட்டு கட்சி இனி அவ்வளவுதான்



13 தொடர்பில் உங்களது கட்சியின் நிலைப்பாடு என்ன ?

குறுந்தூர்மலை விகாரை விவகாரம் பற்றி..?

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் செயற்பாடு தொடர்கிறது,இது தொடர்பில் உங்களது கட்சியின் நிலைப்பாடு என்ன?

சுதந்திர கட்சி இப்போது தனித்துவிட்டதே. எப்படி தேர்தலில் வெல்லப் போகிறீர்கள்?

குருநாகல் கெட்டிபொலவில் இடம்பெறவிருந்த உங்களது கட்சியின் 72ஆவது சம்மேளனக் கூட்டம் திடீரென கொழும்பு தலவத்துக்கொடவிற்கு மாற்றப்பட்டது ஏன் ?

, t;thW gy Nfs;tpf SfF gjpy; toq;fpdhu; Kd;dhs; [dhjpgjpAk; =yq;fh Rje;jpu f l;rpapd; j i y tUkhd ikj;jpughy rpwpNrd. mtuJ KOikahd Ngl;b fNo juggl;Ls;sJ.

கேள்வி: குருநாகல் கெட்டிபொலவில் இடம்பெறவிருந்த உங்களது கட்சியின் 72ஆவது சம்மேளனக் கூட்டம் திடீரென கொழும்பு தலவத்துக்கொடவிற்கு மாற்றப்பட்டது ஏன் ?

பதில் : நாட்டின் எல்லா பகுதிகளிலும் இருந்து ஹெட்டிபொலவிற்கு மக்கள் செல்வதற்கு அதிக செலவாகும்.கொழும்புக்கு வருவதுதான் எல்லா வகையிலும் வசதி.அதன் காரணமாகவே கொழும்புக்கு மாற்றப்பட்டது.

கேள்வி :அந்தக் கூட்டத்தின்போது கட்சியின் செயலாளர் மாற்றப்படுவாரா?

பதில் : இல்லை.அதில் அதிகாரிகள் மாத்திரமே தெரிவு செய்யப்படுவார்கள். செயலாளரை மாற்றுவதாக இருந்தால் நிறைவேற்று குழுவைக் கூட்ட வேண்டும்.இந்தக் கூட்டத்தில் செயலாளரை மாற்ற முடியாது.

கேள்வி : இதில் சந்திரிக்கா கலந்துகொள்வாரா?

பதில் : அழைத்திருக்கிறோம்.அழைப்பை ஏற்றிருக்கிறார்.கலந்துகொள்வார் என நம்புகிறேன்.அரசியலில் நண்பர்களும் இல்லை்எதிரிகளும் இல்லை.

43 வருடங்கள் நான் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக அரசியல் செய்தவன்.2015இல் நான் ஜனாதிபதியாக இருந்தேன்.ரணில் பிரதமராக இருந்தார்.ஒரே அமைச்சரவையில் இணைந்து வேலை செய்தோம்.

எப்போதாவது நினைத்திருப்போமா ரணிலை ராஜபக்ச குடும்பம் ஜனாதிபதியாக்கும் என்று. ஆனால்,நடந்துவிட்டது.அதுதான் அரசியல்.

கேள்வி : 13 தொடர்பில் உங்களது கட்சியின் நிலைப்பாடு என்ன ?

பதில் : இது தொடர்பில் அரசு அதன் நிலைப்பாட்டை வெளியிட வேண்டும்.அதைப் பார்த்துத்தான் நாம் எமது நிலைப்பாட்டை வெளியிடுவோம்.

13இல் அமுல்படுத்தக்கூடிய விடயங்களும் உள்ளன.அமுல்படுத்த முடியாத விடயங்களும் உள்ளன.பொலிஸ் –காணி அதிகாரங்கள் போன்றவற்றுடன் நாம் உடன்பட முடியாது.

கேள்வி : 13 ஐ ரணில் அமுல்படுத்துவாரா?

பதில் : முன்பிருந்த 7 ஜனாதிபதிகளும் இது விடயத்தில் எப்படி நடந்துகொண்டார்களோ அப்படித்தான் ரணிலும் நடந்துகொள்வார். ஒருபோதும் அமுல்படுத்தமாட்டார்.

கேள்வி குறுந்தூர் விகாரை விவகாரம் பற்றி..?

பதில் : இது பேசித் தீர்க்கப்பட வேண்டிய விடயம்.இதை வைத்துக்கொண்டு எவரும் இனவாதத்தைக் கிளம்புவதற்கு இடம் கொடுக்கக்கூடாது.

எமது நாடு 30 வருட போரால் பாதிக்கப்பட்ட நாடு.அந்த நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது. எல்லாப் பிரச்சினைகளும் பேசித் தீர்க்கப்பட வேண்டும்.

கேள்வி :அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் செயற்பாடு தொடர்கிறது,இது தொடர்பில் உங்களது கட்சியின் நிலைப்பாடு என்ன?

பதில் : நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை தனியார்மயப்படுத்தினால் பரவாயில்லை. அவை அரசுக்குப் பாரமானவை.அவற்றை இயக்குவதற்கு மக்களே பணம் கொடுக்க வேண்டும்.இப்போதைய பொருளாதார நிலையில் அவற்றை இயக்குவது முடியாத காரியம்.

ஆனால், இலாபம் அடையும் நிறுவனங்களை விற்பதை எம்மால் ஏற்க முடியாது.டெலிகொம் நிறுவனத்தை விற்பதானது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்.

கேள்வி : உங்களைப்பற்றிய சுயசரிதை ஒன்றை எழுதவுள்ளீர்கள் என்று அறிகிறோம். அது உண்மையா?

பதில் : ஆம்.சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் ஒரே நேரத்தில் அந்த புத்தகம் வெளியிடப்படும்.

சிங்களத்தில் அச்சடித்து முடிந்துவிட்டது. ஆங்கிலத்தில்தான் வேலை போய்க்கொண்டு இருக்கிறது.நான் எதிர்கொண்ட பிரச்சினைகள்,அனுபவங்கள் எல்லாம் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எதிர்கால சந்ததிக்கு இந்தப் புத்தகம் பிரயோசனமாக இருக்கும்.எனது மகள் என்னைப்பற்றி எழுதிய “ஜனாதிபதி அப்பா” என்ற புத்தகத்தில் இருந்து இது முற்றிலும் வித்தியாசமானது.

கேள்வி : மொட்டு கட்சியின் தற்போதைய மக்கள் செல்வாக்குப்பற்றி ?

பதில் : மொட்டு கட்சியால் இனி எழும்ப முடியாது.கிராமங்களுக்குச் செல்லும்போது மக்கள் பேசுகின்ற பேச்சைக் கேட்டால் புரியும் மொட்டுக்கு இனி இடமில்லை என்று. அவர்களால் அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க முடியாது.

நாம் ஊர் ஊராகச் செல்வதால் மக்களின் நிலைப்பாட்டை நாம் அறிவோம்.முதலில் மொட்டு என்பது அரசியல் கட்சியல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களின் நிர்வாகிகள் சபையை எங்குமே வெளிப்படுத்தியது கிடையாது.

மொட்டின் கட்டமைப்பு என்ன? அதன் யாப்பு என்ன? அதன் வியூகம் என்ன? எதுவுமே இல்லை.அதற்கு மத்திய குழு உள்ளதா? இல்லையென்றால் செயற்குழு உள்ளதா? எதுவுமே இல்லை.

ஓர் அரசியல் கட்சிக்கான கட்டமைப்பு அதற்குக் கிடையாது.

கேள்வி : சுதந்திர கட்சி இப்போது தனித்துவிட்டதே.எப்படி தேர்தலில் வெல்லப்போகிறீர்கள்?

பதில் : இல்லை.நாம் தனித்துவிடவில்லை. எல்லோருடனும் பேசிக்கொண்டு இருக்கிறோம். சில விடயங்கள் வெளியே வருகின்றன.சில விடயங்கள் வருவதில்லை.

நான் ஏற்கனேவே ஜனாதிபதியாக இருந்த அனுபவம் இருப்பதால் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக இருப்பதில் எனக்கு எந்த கஷ்டமும் இல்லை.அது எனக்கு இலகுவான விடயம்.

முன்னாள் ஜனாதிபதிகளில் என்னால் மாத்திரம் இன்னொரு தடவை ஜனாதிபதியாக இருக்க முடியும்.நான் ஒரு தடவை மாத்திரம்தான் ஜனாதிபதியாக இருந்துள்ளேன்.இன்னொரு தடவை இருக்க முடியும். நான் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் எனக்கு சர்வதேச உறவு பலமாக இருந்தது.

இன்றும் அதே உறவு உள்ளது. அந்த உறவின் அடிப்படையில் எப்படி இந்த நாட்டை முன்னேற்ற வேண்டும் என்று எனக்குத் தெரியும். சர்வதேச நாடுகளின் உறவைப் பெறுவதென்பது ஒரு கலை.அந்தக் கலை எனக்கு நன்றாகவே தெரியும் – என்றார்.

**நான் ஏற்கனேவே ஜனாதிபதியாக இருந்த அனுபவம் இருப்பதால் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக இருப்பதில் எனக்கு எந்த கஷ்டமும் இல்லை. அது எனக்கு இலகுவான விடயம். முன்னாள் ஜனாதிபதிகளில் என்னால் மாத்திரமே இன்னொரு தடவை ஜனாதிபதியாக இருக்க முடியும். நான் ஒரு தடவை மாத்திரம்தான் ஜனாதிபதியாக இருந்துள்ளேன். இன்னொரு தடவை இருக்க முடியும்.**



# இரண்டு நாட்களாக சாப்பிடவில்லையாம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அண்மையில் ஓர் ஊரில் இருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்ததாம்.அழைப்பை எடுத்தவர் ஒரு பொது மகன்.

ஏன் எடுத்தார் தெரியுமா?

அவரது குடும்பம் சாப்பிட்டு இரண்டு நாட்களாகுதாம்.சாப்பாட்டுக்கு ஏதாவது ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுத்தான் அந்த அழைப்பை எடுத்தாராம் அவர்.

நாட்டின் வறுமை எப்படி இருக்கிறது என்று பாருங்கள்.நேரடியாக அரசியல்வாதிகளுக்கே மக்கள் தொலைபேசி அழைப்பை எடுத்து உதவி கேட்கும் நிலைக்கு மாறிவிட்டனர்.

நாட்டை இந்த நிலைக்கு மாற்றியவர்கள் அரசியல்வாதிகள்தானே. அவர்களிடம்தானே கேட்க வேண்டும்.எல்லோரும் இப்படியே செய்தால் நல்லா இருக்குமே..

துப்பறிவாளன்



# மூன்று அமைச்சர்கள் டப்ள் கேம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக இருந்து கட்சி பணிகளை புறக்கணித்து வரும் மூன்று அமைச்சர்கள் தொடர்பில் பசில் தலைமையில் மொட்டு கட்சி கூடி ஆராய்ந்தது.

அவர்களுக்கு வழங்கப்பட்ட கட்சி வேலைகளை அவர்கள் புறக்கணித்து வருவதால் அவர்களின் மாவட்டடங்களுக்கு வேறு ஆட்களை நியமிப்பதற்கு தீர்மானித்து அந்த முடிவை அந்த மூவருக்கும் அனுப்பியது பசில் தரப்பு.

இதனால் பயந்து போன மூவரும் தனித் தனியாக ஓடிச் சென்று பசில் ராஜபக்சவை சந்தித்து பேசினர்.

அவர்கள் மூவரும் ஒரேமாதிரி பதில் வழங்கினர்.

ரணிலை அடுத்த வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்று நாங்கள் கூறியது உண்மைதான்.

ஆனால்,மொட்டு யாரை வேட்பாளராக அறிவிக்கிறதோ அவர்களுக் குத்தான் நாம் ஆதரவு வழங்குவோம்.

ரணிலை நிறுத்தினால் ரணிலை ஆதரிப்போம். அல்லது வேறு ஒருவரை நிறுத்தினால் அவரை ஆதரிப்போம் என்றனர்.

அவர்கள் இரண்டு பக்கமும் ஆடுகிறார்கள் என்கிறார்கள் மொட்டு



# இரவில் மட்டுமே சந்திப்பு

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்பதற்காக ரணில் விக்ரமசிங்க மொட்டு கட்சியின் நிமால் லான்சாவின் தலையையில் அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவது நாம் அறிந்ததே.

மொட்டு கட்சியின் பலரை தம் பக்கம் வளைத்துப் போடுவதற்காகவே லான்சா இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளார்.

இருந்தும்,லான்ஸாவும் பசில் ராஜபக்சவும் இரவு நேரங்களில் மாத்திரம் ரகசியமாக சந்தித்து பேசி வருகிறார்கள் என்கிறது மொட்டுத் தரப்பு.

பசிலுக்கு எதிராக களமிறங்கியுள்ள லான்சா ஏன் பசிலை ரகசியமாக சந்தித்து வருகிறார் என்ற கேள்வி எழுகிறது.



# பிரசன்னவின் தடை வேலி

சில நாட்களுக்கு முன் நுவரெலியாவில் இடம்பெற்ற மொட்டு கட்சியின் எம்பிக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கிடையிலான மஹிந்த ராஜபக்ச சவால் கிண்ண கிரிக்கட் போட்டியில் கம்பஹா மாவட்ட எம்பிக்களை கலந்துகொள்ள வேண்டாம் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ரகசியமாக கூறி இருந்தார்.

அவ்வாறு கலந்துகொண்டால் ஜனாதிபதியின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டி வரும் என்று கூறினார்.

இருந்தும்,இரண்டு எம்பிக்கள் கலந்துகொண்டனர்..மூவர் கலந்துகொள்ளவில்லை.வேறு வேலை உள்ளது என்று ஏற்கனவே கூறிவிட்டு கலந்துகொள்ளாமல் இருந்துவிட்டனர்.



# அமைச்சரின் வயலுக்கும் சேதம்

சமணலவெவ நீர்த்தேக்கத்தில் இருந்து நீர் வழங்கப்படாததாலும் கடும் வரட்சி காரணமாகவும் தெற்கில் பல விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டன.

அவ்வாறு பாதிக்கப்பட்ட வயல் நிலங்களுள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் வயலும் அடங்குகிறதாம்..

அவரது இரண்டு ஏக்கர் வயல் அப்படியே அழிந்துவிட்டதாம்.அழிந்து போன வயலுக்கு நெருப்பு வைக்காமல் அதை விலங்குகளுக்கு உணவாக வழங்கப் போகிறாராம் அமைச்சர்.

பெரிய மனசுதான் போங்க.





# சின்ன சிங்கம்

1930 முதல் 40வரை அரசியல் செய்த மஹிந்த ராஜபக்சவின் பெரியப்பா டி.எம். ராஜபக்ஸ ""ரு/ஹனுவின் சிங்கம் "" என்று அரசியல் தளத்தில் அழைக்கப்பட்டார்.

அவர் மஹிந்தவின் அப்பாவின் மூத்த சகோதரர்.

அவருக்கு பின் ராஜபக்சவின் குடும்பத்தில் எவரும் சிங்கம் என்று அழைக்கப்படவில்லை.இப்போதுதான் முதன் முதலாக ஒரு சிங்கம் வெளியாகியுள்ளது.

அதுவும் "" சின்ன சிங்கம்"".

அது வேறு யாருமல்ல.நாமல் ராஜபக்சதான்.

சில நாட்களுக்கு முன் இடம்பெற்ற மொட்டு கட்சியின் மத்திய கொழும்பு தொகுதிக் கூட்டத்திலேயே நாமலுக்கு இவ்வாறு சின்ன சிங்கம் என்று பெயர் சூட்டப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நாமலை களமிறக்கத் துடிக்கும் சிலர் பார்க்கின்ற கிறுக்கு வேலைதான் இதெல்லாம்.

# பஸ்ஸில் ஏற வேண்டாம்

இந்தப் போட்டியில் கலந்துகொள்வதற்காக எம்பிக்கள்– இராஜாங்க அமைச்சர்கள் அனைவரும் கொழும்பில் இருந்து பஸ்களில் நுவரெலியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பயணிக்கும் அன்றைய தினம் மாதிவலயில் உள்ள எம்பிக்களின் விடுதிகளுக்கு அருகில் இரண்டு பஸ்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

அவற்றில் ஏறுவதற்காக எம்பிக்கள் தயாராகிக்கொண்டு இருந்தனர். அப்போது பிரசன்ன ரணதுங்கவின் தரப்பில் இருந்து அந்த எம்பிக்கள் பலருக்கு தொலைபேசி அழைப்புகள் வந்தன.

எவரும் அந்த பஸ்களில் ஏற வேண்டாம்.தேவையில்லாமல் ஜனாதிபதியைப் பகைத்துக்கொள்ள வேண்டி வரும் என்று கூறினர்.

அதை எவரும் கணக்கில் எடுக்காது பஸ்களில் ஏறினர்.



- சின்னத்தம்பி குருபரன் -

- தொடர் - 02 -

# உலகின் நடைபெறும் யுத்தங்களின் போக்கில் உயிராயுத யுத்தம்

இவ்வுலகில் உயிரினங்கள் தோன்றிய காலம் தொடக்கம் இன்றுவரை மோதல்பளும் யுத்தங்களும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஐந்தறிவுக்குட்பட்ட உயிரினங்கள் உணவுக்காகவும் தான் ஒரு வீரன் என்பதை நிரூபித்து விரும்பிய பெண்ணுடன் உடலுறவு கொள்வதற்காகவும் பல உயிரினங்கள் கொல்லப்படுகின்றன.

அதேபோல் உலகின் முதல் காதலர்களான ஆதாம், ஏவாள் ஆகியோருக்குப் பின்னர் இருந்து இற்றைவரை சண்டைகள், சச்சரவுகள், கலகங்கள், போராட்டங்கள், மோதல்கள், யுத்தங்கள் ஆகியன மண், பொன, பெண், புகழ் என்பவற்றுக்காக நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

இன்று உலகில் நடைபெறும் யுத்தங்களை எடுத்து நோக்கும் போது அவை ஆயத யுத்தம் (றுநயிழளெ றுயச), உயிராயுத யுத்தம் (டீழை றுநயிழளெ றுயச), மௌனாயுத யுத்தம் (ளுடைநவெ றுநயிழளெ றுயச) ஊடக யுத்தம் (ஆநனயை றுயச) ஆகிய யுத்தங்களும் உலகினைச பேரழிவுக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கின்றன.

புராண, இதிகாச காலத்தில் அசுரர்கள், தேவர்களுக்கிடையிலான யுத்தங்கள், இராம, இராவண யுத்தம், மகாபாரத குருசேத்திரப் போர் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட சில ஆயுதங்கள் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் யப்பானை வீழ்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட அணுவாயுதங்கள், எதிர் காலத்தில் பயன்படுத்துவதற்கெனப் பரிசோதனை செய்யப்பட்டு தயார் நிலையில் இருக்கும் ஆயுதங்களையும்விடச் சக்தி வாய்ந்தன என ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

அணுவாயுதங்கள், ஏவுகணைகள், கொத்தணிக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள், ஆடிலரிக் குண்டுகள், பல்குழல் ஆடிலரிக் குண்டுகள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள், பல்குழல் துப்பாக்கிகள், பீரங்கிகள், நிலக் கண்ணிவெடிகள் ஆகியன பாரிய அழிவைத் தரும் நவீனரக ஆயதங்களாகும்.

இத்தகைய பாரிய ஆயதங்களில் பல இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நேட்டோ நாடுகள், பழைய வார்சோ உடன்படிக்கை நாடுகள், அத்துடன் ஈரான், வடகொரியா, சீனா ஆகிய நாடுகளில் பாரிய அணு ஆயுதங்கள் பரிசோதனை செய்யப்பட்டு பயன்படுத்துவதற்குத் தயாராய் உள்ளன.

இவை ஆயுத யுத்தங்களில் பயன்படுத்தும் போது பாரிய பேரழிவைத் தரும் ஆயுதங்களாக உள்ளன.

ஆயுத யுத்தங்கள் ஒரு புறமிருக்க இன்று நவின உலகில் நடைபெறும் யுத்தங்களில் மிகப் பயங்கரமானதும் ஆபத்தானதும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமான யுத்தங்கள் உயிராயுத யுத்தம், மௌனாயுத யுத்தம் ஆகியனவாகும்.

கி.பி 450 அளவில் உரோமானிய யுத்தத்தின்போது எதிரிப் படைகள் வீழ்த்துவதற்காக மலேரியா நோய் மற்றும் யானைக் கால் நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் குருதியை அம்புகளில் பூசி எய்ததாக தற்போதைய ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன்.

இவை உயிராயுதங்களாக இருந்த போதிலும் அக்காலத்தில் விசம், திரவம், நஞ்சு பூசிய ஆயுதங்களாகவே கொள்ளப்பட்டன. கிளியோபத்திரா, மகா அலெக்சாண்டர், நெப்போலியன், யூலியட் சீஷர் போன்றோரும் யத்தத்தின்போது இத்தகைய ஆயுதங்களைப் பயன்படுத்தி இருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன.

இரண்டாம் உலகமகா யுத்தின் போதும் அதன் பின்னரும் பயன்படுத்தப்படும் உயிராயுதங்கள் ஆய்வுகூடப் பரிசோதனைகளின் மூலம் பேரழிவை ஏற்படுத்துவதற்காகத் பெரும்பாலும் இரகசியமாகத் தயாரிக்கப்படுகின்றன.

இரண்டாம் உலகமகா யுத்த காலத்தில் சின்னம்மை, பெரியம்மை, கொலரா நோய்க்கான வைரசு. பக்ரீரியாக்கள் கொண்ட உயிராயுதங்கள் தயாரிக்கப்பட்டு வல்லரசு நாடுகளால் எதிரி நாடுகளில் பரப்பப்பட்டன.

இந்த ஆயுத, உயிராயுத யுத்தங்களினால் பல இலச்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். உயிராயுதங்களால் பரப்பப்படும் நோய்களுக்கான போமுலா குறித்த நாடுகளிடமே இருக்கும் என்பதால் நோய்க்கான மருந்தினைப் பிற நாடுகள் கண்டுபிடிப்பது சிரமமானதாகும். அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டாலும் அவை தற்காலிகமானதாகவே இருக்கும்.

அதேபோல் உஐஏ, இபோலா,யு1உ1, யு2உ2 ,மேஸ், சார்ஸ், சிக்கின்கோனியா, பறவைக் காய்ச்சல், கோவ் 2, கொவிட் 19 வைரசுகள் யாவும் தற்போதைய அதி பயங்கரமான உயிராயுதங்கள் ஆகும்.

இவற்றுள் யு2உ2 வைரஸ் பேரழிவைத் தரக்கூடிய அதிபயங்கரமானது. இதன் அபாயத்தைத்தை உணர்ந்து ஆய்வுகூடம் முதல் போமுலா வரை யாவும் அழிக்கப்பட்டுள்ளன. சில நாடுகள் இவ்விஞ்ஞானிகளைத் தேடி வலைவிரித்துக் கொண்டிருக்கின்றன.

சீனாவின் வூஹான் நகரிலுள்ள உயிரியல் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் 2500 வரையிலான வைரசுகள் உற்பத்தி செய்யப்பட்டுப் பேணப்படுவதாக இரகசியத் தகவல்கள் கூறுகின்றன. வல்லரசு நாடுகள் சில தயாரிக்கும் பல உயிராயுதங்கள் பற்றிய தகவல்கள் வெளிவராமல் இருக்கின்றன.

HIV, A1H1, Covid 19

1.சார்ஸ்,மேஸ்,போலா, கோவ், டெங்கு வைரஸ் ஆகியன அவற்றுள் அடங்கும். இவ்வாயுதங்கள் பற்றிய தகவல்கள் வெளிவந்தாலும் அவற்றைத் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி மூடி மறைத்து விடுகின்றனர்.

“உலகம் தோன்றிய காலம் முதல் இன்றுவரை பரிணாம வளர்ச்சியில் எத்தகைய மாற்றமும் இல்லாதிருக்கும் உயிரினங்கள் யாவும் பிற்காலத்தில் உயிரினங்களின் அழிவுக்காக விஞ்ஞானிகளால் பயன்படுத்தப்படும்“ என சாள்ஸ் டார்வின் குறிப்பிடுகின்றார்.

ஏனெனில், அவருடைய இறுதிக்கட்ட ஆய்வுகள் யாவும் .இத்தகைய உயிரினங்கள் பற்றியதாகவே அமைந்திருந்தன. ஒட்டகம், வௌவால, எலி, சில பாம்புகள், ஆமை, கரப்பான் பூச்சி, சிலவகைப் பறவைகள், குருங்கு, தவளை எனச் சிலவற்றைப் பட்டியல் படுத்தி உள்ளார்.

இவ்வகை உயிரினங்களில் வைரஸ், பக்ரீரியா போன்றன எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்தாது னென்பதனால் உயிராயுத உற்பத்திக்காக இத்தகைய உயிரினங்களை ஆய்வுகூடங்களில் பரிசோதனைக்காகப் பயன்படுத்துகினறனர்.

இவற்றினால் பரப்பப்படும் நோய்கள் அவற்றினால் பரப்பப்பட்டதாகக் கொள்ளப்படுமே தவிர ஆய்வுகூடங்களில் பரிசோதிக்கப்பட்டு பரப்பப்பட்டதாக அமையாது. இவ்வாறுதான் கொவிட் 19 வைரஸ் தொடர்பாக சீனா போன்ற நாடுகள் தப்பித்துக் கொண்டிருக்கின்றன.

தற்பொழுது உக்ரேனில் நடந்து கொண்டிருப்பது நவீன ஆயுத யுத்தம். இது அந்நாட்டின் உயிர், உடமைகள், வர்த்தகம், பொருளாதாரம் ஆகியவற்றுக்குப் பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருப்பதோடு உலக நாடுகளையும் பாதித்துக் கொண்டிருக்கின்றன.

ரசியாவின் வீட்டோ அதிகாரம், ஐக்கிய நாடுகள் சபையின் பலவீனம், சில நாடுகளின் பக்கச்சாரபு, கனிய வளம், ஆயுத பலம் ஆகியன இன்றைய நெருக்கடிக்குக் காரணமாக அமைகின்றன. ஒரு பக்கம் உயிராயுத யுத்தம் மறுபக்கம் ஆயுத மோதல் என்று மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போலாகிவிட்டது மனித அவலம். இந்நிலமை சீராவதற்குப் பல ஆண்டுகள் தேவைப்படலாம்.

உயிராயுத யுத்தம் பலம் வாய்ந்த நாடு ஒன்று இன்னொரு நாட்டைத் தம் பிடிக்குள் கொண்டு வருவதற்காகவும் அந்நாட்டின் வளங்களைச் சுரண்டுவதற்காகவும் இதனைக் கையாள்கின்றன. ஒரு நாட்டில் ஒரு வைரசைப் பரப்பி விட்டால் அந்த வைரசுக்குரிய மருந்தும் குறித்த நாட்டிடமே இருக்கும்.

மருந்துக்குரிய போமிலாவையும் அந்நாடு ரகசியமாக வைத்திருக்கும். அதனால் மருந்தை வழங்குவதற்காக நாடுகளுடன் பேரம் பேசுவார்கள். அதேபொல் திட்டமிட்டு குறித்த நாடுகளில் அரசியல், பொருளாதார நெருக்கடியையும் உருவாககி நாட்டினை மறைமுகமான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார்கள். இதற்காக உயிராயுத யுத்தம், மௌனாயுத யுத்தம், ஊடக யத்தங்களை நடாத்துகின்றனர்.

துருவப் பிரதேசங்களிலும் ஏனைய சில இடங்களிலும் உள்ள பனிப்பாறைகள் அதிகரித்த புவிவெப்பம் காரணமாக, வேகமாக உருகிக் கொண்டிருக்கின்றன. அந்த இடங்களில் ஆய்வு செய்த ஆய்வாளர்கள் புதுப் புது வைரசுக்களைக் கண்டு பிடித்துக் கொண்டிருக்கின்றனர்.

அண்மையில் (2023) ஜேர்மன், இரசியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் விஞ்ஞானிகள் குழுவொன்று இரசியாவின் சைபிரிய உறைபனிப் பள்ளத்தாக்கில் உள்ள பெர்மாவ்ரோஸ்ட் என்ற இடத்தில் இருந்து 48,500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து பனிப்பாறைகளில் உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்த சோம்பி எனப்படும் வைரஸ் ஒன்றைக் கண்டுபிடித்தள்ளனர்.

இது மிக அபாயகரமான வைரசாகும். இவ்வைரஸ் ஒருவரின் உடலில் நுழைந்தால் அவரின் மூளையின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தி அவரை ஒரு மிருகமாகவோ அல்லது அமானுஷ்ய சக்தி கொணடவராகவோ மாற்றி விடும்.

இவ்வபாயகரமான வைரசும் எதிர்காலத்தில் உயிரினங்களுக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையப்போகினறன. இந்த வைரஸ் சீனா போன்ற நாடுகளின் கையில் பட்டால் அதை வைதுக்கொண்டு உலக நாடுகளைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். 2018 இல் ஜெயம் ரவி நடித்து வெளிவந்த ஷமிருதன்; தமிழ் திரைப்படம் இவ்வைரசின் அபாயத்தினைக் குறிப்பாக வெளிப்படுத்தி இருந்தது.

**எதிர்வரும் காலங்களில் உலக நாடுகளை ஆயுத யுததங்களையும் விட உயிராயுத யுத்தம், மேளனாயுத யுத்தம், ஊடக யுத்தம் ஆகியன நிலைகுலையச் செய்யப் போகின்றன. இப்போதிருக்கும் அரசியல், பொருளாதார நெருக்கடியில் இலங்கை போன்ற நாடுகள் தாக்குப் பிடித்துச் சமாளித்துக் கொள்ளுமா என்பதும் கேள்விக் குறியாகும். காலம் பதில் சொல்லும்.**








# SLT - MOBITEL இனால் டிஜிட்டல் புகைப்படக் கட்டமைப்பு அறிமுகம்

இலங்கையின் புகைப்படக் கலைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்தி, பாவனையாளர்களுக்கு பிரத்தியேகமான, சிறந்த உள்நாட்டு பொருளடக்கங்களை வழங்கும் வகையில், நாட்டின் முதலாவது டிஜிட்டல் புகைப்படக் கட்டமைப்பான 'www.picsforest.com' I SLT-MOBITEL அறிமுகம் செய்துள்ளது.

வெளிநாடுகளைச் சேர்ந்த பல புகைப்படக் களஞ்சிய இருப்புகள் விற்பனை மற்றும் கொள்வனவு இணையத்தளங்கள் காணப்பட்ட போதிலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவை உள்நாட்டுக்கு உகந்த வகையில் அமைந்திருப்பதில்லை.

எவ்வாறாயினும், பல உள்நாட்டு அல்லது சர்வதேச புகைப்படக் கலைஞர்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்தி, தமது புகைப்படங்களுக்கு வருமானம் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும், உள்நாட்டு புகைப்படங்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் பாவனையாளர்கள், சர்வதேச இணையத்தளங்களில் தங்கியிருக்க வேண்டியுள்ளதுடன், அவை செலவு அதிகமானதாகவும் அமைந்துள்ளன.

இந்த முக்கிய தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், SLT-MOBITEL இனால் வலுவூட்டப்பட்ட புதிய டிஜிட்டல் கட்டமைப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கையின் புகைப்படங்களை கொள்வனவு மற்றும் விற்பனை செய்யக்கூடிய புகைப்படக் களஞ்சிய ந-வணிக தளமாக அமைந்துள்ளது.

# கைத்தொழில் கண்காட்சி–2023

இலங்கை மக்களுக்கு வியாபார சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்காக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் கைத்தொழில் கண்காட்சியொன்று செப்டம்பர் மாதம் 01, 02 மற்றும் 3 ஆம் திகதிகளில் யாழ் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறும்.

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள பல்வேறு தொழில்துறைகள் சார்ந்த 300 ற்கும் அதிகமான காட்சிகூடங்களை இக் கண்காட்சியில் காணலாம்.

இக் கண்காட்சிக்கு வருகை தருவதன் மூலம் புதிய தொழில் நுட்பத்தை அடையாளம் காணவும், புதிய வியாபார வாய்ப்புகளை இணங்காணவும் விநியோக சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும் மற்றும் இலங்கையில் உள்ள தயாரிப்புகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

மேலும் இந்த கண்காட்சியில், இலங்கை தொழில்துறை மேம்பாட்டுக் குழு உள்ளிட்ட தொழிற்சேவை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் பிரதேசத்தில் நீங்களும் வெற்றிகரமான வியாபாரியாக வலம் வருவதற்கான சந்தர்ப்பத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 0212 222 421 அல்லது 0779497924 என்ற எண்களுக்கு அழைப்பதனூடாக இலங்கை தொழில்துறை மேம்பாட்டுக் குழுமத்தின் யாழ் மாவட்டக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

# Samsung இன் Air Conditioning Tips



பருவகாலநிலை மாற்றத்தினால் தூண்டப்படும் உலகளாவிய வெப்ப அலைகள் மிகத் தீவிரமடைந்து வரும் ஓர் சூழ்நிலையில், Samsung Electronics இன் Engineer கள், Samsung இன் பாவனையாளர்கள் தமது Air Conditioning System என்பன இன்னும் அதிக பயன் தாரக கூடிய வகையில் உபயோகிக்க பல பயனுள்ள தீர்வுகளை வழங்குகின்றனர்.

இந்நடைமுறை நுண்ணறிவு, energy efficiency, Wind –Free cooling மற்றும் Effective dehumidification போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றது. அதிகரித்து வரும் வெப்பநிலையை மேற்கொள்ளவும் மற்றும் நுநெசபல தொடர்பான செலவீனங்களை நிர்வகிப்பதற்கான ஒரு Powerful Toolkit யே Samsung உருவாக்குகின்றது.

வெப்பநிலையின் உயர்வு காரணமாக ஈரப்பதம் அதிகரிக்கும் போது நாம் அசௌகரியதினை இடைவிடாமல் உணர முடியும். இச்சவாலை எதிர்கொள்ள, Samsung Engineer கள் உங்களின் Air Conditioner களின் தன்மைகளை உங்களின் உடனடிச் சூழலுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்க பரிந்துரைகளை முன்வைக்கின்றனர்.

Air Solution R&D Group இன் Jun Hwang எனும் உத்தியோகத்தர் கூறுகிறார், "உங்கள் வீட்டின் சூழ்நிலைகளுக்கு ஏற்ற விதமாக நடைமுறைப் பயனை தெரிவு செய்யவும், Cooling மற்றும் Dry Mode ஒரே மாதிரியாகத் தோன்றினாலும், அவை ஒவ்வொன்றும் வெவேறு பட்ட நோக்கங்களுக்காக தொழில்படுகின்றன".

Cooling Mode ஆனது Compressor output ஐ சரிசெய்து, Minimal Energy Expenditure ஊடாக விரும்பிய வெப்பநிலையை அடைவதன் மூலம் Indoor Space ஐ உடனடியாக குளிர்விக்கின்றது. மாறாக, Dry Mode ஆனது வெப்பநிலையை மாற்றாமல் Humidity ஐ குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கின்றது.






# SLIIT SCIFEST 2023 கண்காட்சி

SLIIT இன் மனிதநேய மற்றும் விஞ்ஞான பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட் வருடாந்த விஞ்ஞான தினம் மற்றும் கண்காட்சியான 'SLIIT SCIFEST 2023' அண்மையில் வெற்றிகரமாக நடைபெற்றதுடன், இது சமூக மற்றும் பிரயோக விஞ்ஞானத் துறைகளில் உள்ள விடயங்களை ஆராய்வதற்கான ஆர்வத்தை இளம் கல்வியியலாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் மத்தியில் தூண்டும் வகையில் அமைந்திருந்தது.

"விஞ்ஞானத்தின் அதிசயங்கள்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற SCIFEST 2023 கண்காட்சியில் 12 பாடசாலைகளிலிருந்து 250ற்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்றதுடன், அறிவியல் உலகம் மீது மாணவர்களுக்கான ஆர்வத்தைத் தூண்டியது.

SLIIT SCIFEST ஐ வருடாந்த நிகழ்வாக உருவாக்குவதும், இதனை எதிரகாலத்தில் SLIIT இன் முக்கிய நிகழ்வாக மாற்றுவதே மனிதநேயம் மற்றும் விஞ்ஞான பீடத்தின் நோக்கமாகும்.

இந்தக் கண்காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் லிங்க் நேச்சர் (பிரைவட்) லிமிடட் நிறுவனத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பணிப்பாளர் கலாநிதி ரி.எம்.எஸ். ஜீ.தென்னக்கோன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் மற்றும் சுற்றாடல் விஞ்ஞானத் திணைக்களத்தின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் ப்ரீதி உடகம சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டார்.




# ஹெய்லிஸ் - THE PEKOE TRAIL ஒப்பந்தம்

,yq;i fad; ghua kwWk; gdKfggLj;jggl;l n`ay]; FOkj;jd; Kf;fa eWtdq;fsd; xd;whd n`ay]; ngUeNjhl;l eWtdkhdJ ehlbd; RwWyh Jiwia NkkgLj;Jk; Nehf;fy; mjd; njhiyNehf;F jl;lj;ij Kdndlf;f "The Pekoe Trail" cld; ifNfhu;j;Js;sJ. n`ay]; ngUeNjhl;l eWtdj;jd; gujhd gUNjr ngUeNjhl;l eWtdq;fs; (RPCs) %d;whd fsdnty ngUeNjhl;l eWtdk; (KVPL)› jythf;fiy ngUeNjhl;l eWtdk; (TTEL) kwWk; n`huid ngUeNjhl;l eWtdk; (HPL) Mfad ,yq;i fad; nkhj;j Njaiy cwgj;jf;F 4.6% gq;fsg;ig toqFfdwJ.

44 Njaiy Njhl;lq;fsD}lhf njhlUk;The Pekoe ghij› vo;y; nfhQRk; kiy ehlbYs;s n`ay]; Njhl;lj;jd; 6 rwej; Njaiy Njhl;lq;fsd; toahf nry;fwJ. midtUf;Fk; eiyahd kjg;ig cUthf;Fk; mNjNtisa y; ,j;jl;lj;jd; %yk; vkJ Njrj;ij kz;Lk; flbnaOg;Gtjw;fhf gq;fsggNj vkJ $l;L Nehf;fkhFk;

# ஐ.நா. உடன்படிக்கையில் இணையும் Ninewells Hospital



இலங்கையில் தனியார் சுகாதாரத் துறையில் பெண்கள் மற்றும் குழந்தைப் பராமரிப்பில் முதன்மையான நிறுவனமான நைன்வெல்ஸ் மருத்துவமனை, ஐக்கிய நாடுகளின் (UN) சர்வதேச உடன்படிக்கையுடனான (UNGC) தனது முன்னோடி கூட்டாண்மையை பெருமையுடன் அறிவிக்கிறது.

இந்த உலகளாவிய முயற்சியுடன் இணைந்த இலங்கையின் முதல் மருத்துவமனை என்ற வகையில், இந்த நடவடிக்கை நைன்வெல்ஸ் மருத்துவமனையின் பொறுப்புணர்வுடனான வணிக நடைமுறைகள், நிலைபேண்தகைமை மற்றும் நெறிமுறை சார்ந்த சுகாதாரப் பாதுகாப்புக்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச உடன்படிக்கையானது நைன்வெல்ஸ் மருத்துவமனையின் பெண்கள் மற்றும் குழந்தைப் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த தளமாக செயல்படுகின்ற அதே சமயத்தில், நிறுவன ஆட்சி நிர்வாகம், இடர் முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு ஆகியவற்றின் முக்கிய கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறது.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச உடன்படிக்கையில் பங்கேற்பதன் மூலம், பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கவும், மனித உரிமைகள், தொழிலாளர் தரநிலைகள் மற்றும் ஊழல்-எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்தவும் மற்றும் அதன் நிலைபேண்தகைமை முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவும் நைன்வெல்ஸ் மருத்துவமனை முயல்கிறது.

# வளர்ச்சியை பதிவு செய்த சன்ஷைன்



பன்முகப்படுத்தப்பட்ட இலங்கையிலுள்ள நிறுவனமான சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி (CSE: SUN) நிலவும் மேக்ரோ-பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் 14% ஆண்டுக்கான (YoY) உயர்மட்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

நடப்பு நிதியாண்டின் (1QFY24) முதல் காலாண்டில் குழுமம் 13.4 பில்லியன் ரூபாவாக ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயைப் பதிவுசெய்துள்ளது. நிர்வாகம் மற்றும் S&D செலவுகள் மற்றும் நிதிச் செலவுகளில் ஆண்டுக்கு 93.5% அதிகரிப்பைக் கொண்டிருந்தது. குழுமத்தின் முக்கிய துறைகளான சுகாதாரம், நுகர்வோர் மற்றும் வேளாண் வணிகம் ஆகியவற்றின் வலுவான வளர்ச்சியின் காரணமாக வருவாய் அதிகரிப்பு முக்கிய பங்கை வகித்தது.

குழுமத்தின் ஹெல்த்கேர் துறையானது சன்ஷைனின் Top-liney மிகப்பெரிய பங்களிப்பாளராக உருவெடுத்தது, மொத்த வருவாயில் 47.2%, நுகர்வோர் 35.1% மற்றும் மொத்த வருவாயில் விவசாய வணிகம் 17.6% ஆகும்.

செயல்திறன் குறித்து கருத்து தெரிவித்த சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.இன் தலைவர் அமல் கப்ரால், "சவால்களுக்கு மத்தியில், சன்ஷைன் ஹோல்டிங்ஸ் குலு24 இன் முதல் காலாண்டில் பாராட்டத்தக்க உயர்மட்ட வளர்ச்சியை எட்டியுள்ளது.

சன்ஷைனின் வெற்றியானது, அதன் குழுவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும், மேலும் அதன் முக்கியத் துறைகளான ஹெல்த்கேர், நுகர்வோர் மற்றும் விவசாய வணிகம் ஆகியவற்றில் சிறப்பாக செயல்படுவதில் கவனம் செலுத்துகிறது.

நிலவும் பொருளாதார நிச்சயமற்ற நிலைகள் இருந்தபோதிலும், மாற்றமடைந்து வரும் திறன் நிறுவனத்திற்குள் பொதிந்துள்ள சுறுசுறுப்பு மற்றும் பின்னடைவைக் காட்டுகிறது. சன்ஷைன் பல்வேறு சவால்களை கடந்து செல்லும்போது, அதன் நிலையான வளர்ச்சி மற்றும் பங்குதாரர்களுக்கான மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றின் அசைக்க முடியாத நாட்டம் உறுதியாக உள்ளது."




# மாணவர்களிடையே போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கை

மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது என்றும் 11 மற்றும் 16 வயதுக்கு இடைப்பட்ட காலத்தில் போதைப்பொருள் பாவனையை பரிசோதித்துப் பார்க்கிறார்கள் என்றும் இலங்கை போதைப்பொருள் எதிர்ப்பு சங்கம் தெரிவித்துள்ளது.

அதிக போதைப்பொருள் பாவனையாளர்கள் 16 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்களகே அதிகமாக பாவனையில் ஈடுபடுகின்றனர்.

கல்வி நிறுவனங்களுக்கு அருகில் சந்தேகத்திற்குரிய விற்பனையாளர்களால் விற்கப்படுகின்றன.இதனால் சிறு வயதிலேயே போதைப்பொருளுக்கு தீமையாகின்றனர்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான தேவையை உணர்ந்து, ஜோன் கீல்ஸ் குழுமத்தின் கூட்டாண்மை சமூக பொறுப்பு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஃபவுன்டேஷன் (ஜேகேஎஃ), 2020 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து அதன் போதைப்பொருள் பாவானை தடுப்பு விழிப்புணர்வு திட்டத்தில் தீவிரமாக முன்னணியில் உள்ளது.

பாடசாலை செல்லும் சிறார்களின் வாழ்க்கையின் ஆரம்பத்தில் சீர்ப்படுத்துவதற்காகத் தலையிடுவது, அவர்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவது மற்றும் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய நடத்தை சிக்கல்களைத் தடுப்பது என நிகழ்வுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# ஏற்றுமதி சந்தை சேவைகளை மேம்படுத்த புதிய தானியங்கி மத்திய களஞ்சியம்




ஹெய்லிஸ் குழுமத்தின் அங்கத்துவரான Dipped Products PLC (DPL) நிறுவனம், முக்கியமான உலகளாவிய ஏற்றுமதி தேவையை பூர்த்தி செய்ய அதன் சேவை வழங்கல் சிறப்பை மேம்படுத்துகிறதும் வகையில் பியகம ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் ஒரு நவீன மத்திய களஞ்சிய வசதி வளாகத்தை நிர்மாணித்துள்ளது.

இந்த புதிய களஞ்சிய வசதி DPL நிறுவனம் ஹங்வெல்ல, கொட்டாவ மற்றும் பியகம தொழிற்சாலைகள் ஊடாக களஞ்சிய வசதிகளை ஒருங்கிணைக்கவும், செயல்பாடுகளை சீரமைக்கவும், போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் செலவுகளை குறைக்கவும் உதவும்.

குறிப்பாக, DPL தனது தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனைத் தெளிவாகக் கண்காணிக்கவும், புதிய களஞ்சிய வசதி மூலம் செயல்பாடுகளை எளிதாகக் கட்டுப்படுத்தவும் உதவும்.

சுமார் 23,000 கன மீட்டர் கொண்ட இந்த நவீன மத்திய களஞ்சிய வசதி, நிறுவனத்தின் டிஜிட்டல் மயமாக்கல் வணிகத்தில் ஒரு புதிய தொழில்நுட்ப மைல்கல்லாகும்.

ஹேய்லிஸ் தலைவரும் பிரதம நிறைவேற்று ஆதிகாரியுமான மொஹான் பண்டித்தகே இந்த களஞ்சிய வசதியை ஆரம்பித்து வைத்ததுடன் DPL பிரதித் தலைவர் ராஜித்த காரியவசம், ஹேய்லிஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் சரத் கனேகொட, DPL முகாமைத்துவப் பணிப்பாளர் புஷ்பிக ஜனதீர மற்றும் ஹேய்லிஸ் குழும முகாமைத்துவக் குழுவின் பணிப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் DPL ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

# விளையாட்டு வீரர்களை வலுவூட்டும் Bodyline



உயர் செயல்திறன் கொண்ட விளையாட்டு ஆடைகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான MAS Holdingsஇன் துணை நிறுவனமான Bodyline, 2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்னதாக இலங்கை தடகள சங்கத்துடன் (SLAA) இணைந்து இலங்கை தேசிய தடகள அணிக்கான அதிநவீன விளையாட்டு ஆடைகளுக்கு அனுசரணை வழங்குவதாக அறிவித்துள்ளது.

இந்த ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, உஸ்பெகிஸ்தானின் ஒலிம்பிக் போட்டிகளுக்கு வழிவகுக்கும் அனைத்து பயணங்களுக்குமான உயர்தர விளையாட்டு ஆடைகளை Bodyline வழங்கும்.


Bodyline தயாரித்த விளையாட்டு ஆடைகள் MAS இன் பல தசாப்த கால நிபுணத்துவத்தால் ஈர்க்கப்பட்டு அண்மைய கால தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கிறது.

நீலம் மற்றும் தங்க நிறங்கள் கொண்ட ஆடைகளின் கவர்ச்சிகரமான வடிவங்கள் மூலம் இலங்கை பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. ஆடைகளில் "கஜசிங்க" உருவமும் இடம்பெற்றுள்ளது, இது யானை மற்றும் சிங்கத்தை இணைத்து வலிமை, புத்தாக்கம் மற்றும் நெகிழ்ச்சி ஆகியவற்றைக் குறிக்கிறது.

ஐந்தாவது ஆசிய இளைஞர் தடகள சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை கனிஷ்ட தடகள அணி கஜசிங்கவினால் ஊக்குவிக்கப்பட்ட வடிவமைப்பை கொண்ட ஆடைகளை பெருமையுடன் அணிந்தனர்.

இளம் விளையாட்டு வீரர்களுக்கு வலுவூட்டுவதில் Bodylineஇன் அர்ப்பணிப்பை இந்த ஒத்துழைப்பு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

# TikTokஇன் Community Guidelines பயிற்சி பட்டறைகள்




TikTok அதன் சமூக வழிகாட்டுதல்கள் (Community Guidelines) பற்றிய விழிப்புணர்வையும் புரிந்துகொள்ளுதலையும் மேம்படுத்த இலங்கையில் ஒரு அற்புதமான பிரச்சார நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இந்த முயற்சியின் மையமாக, வுமைவுழம தளத்தின் சமூக வழிகாட்டுதல்களைப் பற்றிய படைப்பாளர்களின் புரிந்து கொள்ளுதலை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட தொடர்ச்சியான பயிற்சிப் பட்டறைகளை நடத்துகிறது.

சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக, பொறுப்பான உள்ளடக்கத்தை உருவாக்கும் நடைமுறைகளை ஊக்குவிக்கும் அதே வேளையில், பாதுகாப்பான டிஜிட்டல் இடத்தை வளர்ப்பதற்கும் அதன் பாவனையாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சிறந்த சூழலை வளர்ப்பதற்கு வுமைவுழம இன் அர்ப்பணிப்பு முயற்சிகளை இந்தப் பிரச்சாரம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

TikTok இன் சமூக வழிகாட்டுதல்கள் (Community Guidelines), தளத்தின் பயன்பாட்டை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் தரநிலைகளை கோடிட்டுக் காட்டும் ஒரு விரிவான கட்டமைப்பாக செயல்படுகிறது. இந்த வழிகாட்டுதல்கள் வளர்ந்து வரும் போக்குகள் மற்றும் ஏற்படக்கூடிய அபாயங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன.

# ராஜா ஜுவலர்ஸின் பிரத்தியேக வடிவமைப்பு ஒன்லைனில்

ராஜா ஜுவலர்ஸ், இளைஞர்களின் இதயங்களைக் கவரும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட, நேர்த்தியான தயாரிப்புகளுக்கான ஒன்லைன் பிரிவை அண்மையில் வெளியிட்டது.

இதன் மூலம், தொழில்துறையில் 95 ஆண்டுகளுக்கும் மேலான நீடித்த பாரம்பரியத்துடனும், பெருமையுடனும் நவீன தலைமுறையின் மாறும் ரசனைகளை வெளிப்படுத்தும், கவர்ச்சியான சேகரிப்பை ராஜா ஜ/வலர்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது.

அண்மைய தயாரிப்புகளின் ஒன்லைன் வெளியீடு தொடர்பில் ராஜா ஜுவலர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் அத்துல எலியபுர கருத்துத் தெரிவிக்கையில், “எமது வர்த்தகநாம




நெறிமுறையானது, முன்னோக்கிய பேஷனை விரும்பும் இளைஞர்களுக்கு, தனிப்பயனாக்கப்பட்ட, அவர்களது பாணிக்கு ஏற்ற வகையிலான, அன்றாடம் பயன்படுத்தும் நகைகளை மேம்படுத்தி, அவர்களது வாழ்க்கைக்கு பொருந்தும் வகையில் வழங்குவதில் உறுதியாக உள்ளது.

எமது வர்த்தகநாமத்தின் தனித்துவம் மற்றும் காலத்தின் போக்கிற்கு ஏற்ற தன்மை ஆகியவற்றின் தனிச்சிறப்பு அம்சங்களின் கலவையை கொண்டு அமைந்த வடிவமைப்புகளை நாம் மிக கவனமாக தயாரித்து வழங்குகின்றோம்.” என்றார்.

இந்த ஒன்லைன் சேகரிப்பின் வெளியீடானது, இளைஞர்களின் அபிலாஷைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதோடு. அவர்களை டிஜிட்டல் வெளியில் இருப்பதற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், நாகரீகமான நகைகள் மற்றும் சமீபத்திய போக்குடனான வடிவமைப்புகள் மீதான ஆர்வத்தையும் அவர்களுக்கு ஏற்படுத்துகிறது.

# யூனிலீவருக்கு LMDஇன் மகுடம்



தொடர்ச்சியாக 18ஆவது வருடமாக தனது தொழிற்துறை தலைமைத்துவ நிலையை நிலைநிறுத்தி, LMD இன் மிகவும் மதிப்பிற்குரிய நிறுவனங்களின் 2023 தரவரிசையில், மிகவும் மதிக்கப்படும் FMCG (விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள்) நிறுவனமாக யூனிலீவர் ஸ்ரீ லங்கா அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், ‘Consumer Products’ (நுகர்வோர் தயாரிப்புகள்) மற்றும் 'Multinational' (பன்னாட்டு) ஆகிய இரண்டு பிரிவுகளிலும் துறையின் வெற்றியாளராக பெயரிடப்பட்டுள்ளது.

இத்தரப்படுத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட, LMD இன் சிறந்த 12 செயற்றிறன் அளவீட்டு சுட்டிகளிலும் அதிக புள்ளிகளை யூனிலீவர் ஸ்ரீ லங்கா பெற்றுக் கொண்டுள்ளது.

நிதிச் செயற்றிறன், தரத்தில் அதிக கவனம், முகாமைத்துவ உயர் தகுதி, நேர்மை, புத்தாக்கம், இயக்கவியல், கூட்டாண்மை கலாசாரம், பெருநிறுவன சமூகப் பொறுப்பு மற்றும் நிலைபேறானதன்மை, தூரநோக்கு, தேசிய ரீதியிலான பார்வை, மனிதவளம் மற்றும் ஊழியர்கள் முகாமைத்துவம், நெருக்கடி முகாமைத்துவம் ஆகியனவே அச்சுட்டிகளாகும். இந்த விடயங்கள் யாவும் நிறுவனத்தின் நெறிமுறைகளில் ஆழமாக பதிந்துள்ளன.

யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் தலைவரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹாஜர் அலபிபி இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், “நாம் இலங்கையின் மிகவும் மதிப்பிற்குரிய FMCG நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டதையிட்டு மிகவும் பெருமையடைவதோடு, அதனை கௌரவமாகவும் கருதுகிறோம். இந்த அங்கீகாரமானது, எமக்கும் எமது பங்குதாரர்கள் அனைவருக்கும், உள்ளூர் சமூகங்கள் மத்தியில் நாம் ஏற்படுத்தி வரும் சாதகமான மற்றும் நிலைபேறான தாக்கத்தையும், எமது வர்த்தகநாமங்கள் மற்றும் எமது நிறுவனத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது – என்றார்.

# Allianz Lankaஇன் நிட்டம்புவ கிளை இடமாற்றம் செய்கின்றது

Allianz Lanka காப்புறுதி நிறுவனம், நிட்டம்புவவில் உள்ள தனது கிளையை இடமாற்றுகிறது.

இது நவீன வசதிகள் மற்றும் வடிவமைப்பைக் கொண்டுள்ளதோடு, உலகத் தரம் வாய்ந்த சேவைகளை வழங்குகிறது.இதில் ஆயுள் மற்றும் பொது காப்புறுதி பிரிவுகள் இயங்கும்.

இது இலக்கம் 570C, Colombo Rd, Nittambuwa இல் பரந்த வாகனத் தரிப்பிடத்துடன் இலகுவாக அணுகக்கூடிய வகையில் மக்கள் அடிக்கடி நடமாடும் ஒரு முக்கிய இடத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Allianz Insurance Lanka Limited இன் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் இலங்கைக்கான முகாமையாளர் - அலன் ஸ்மீ, Allianz Life Insurance Lanka Limited இன் பிரதம நிறைவேற்று அதிகாரி - ஜயலால் ஹேவாவசம், பிரதம விநியோக அதிகாரி - ரங்க டயஸ், தேசிய விற்பனைத் தலைவர் - ஜயநாத் அல்விஸ், முகவர் நிறுவனத்தின் தலைவர் - சமில அமுனுகம, மற்றும் தலைவர்-சந்தைப்படுத்தல் - கசுன் யட்டவர ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.




# ஒரியன்ட் பைனான்ஸிற்கு தங்க விருது

ஒரியன்ட் பைனான்ஸ் நிதி நிறுவனத்துக்கு “இலங்கை இஸ்லாமிய வங்கி மற்றும் நிதித் தொழில் விருதுகளில்” தங்க விருது கிடைத்துள்ளது.

இந்நிகழ்வில் ஒரியன்ட் மாற்று நிதி வணிகப் பிரிவு (AFBU) இரண்டு மதிப்புமிக்க விருதுகளுடன் கௌரவிக்கப்பட்டுள்ளது.

“ஆண்டின் வளர்ந்து வரும் இஸ்லாமிய நிதி நிறுவனத்திற்கான தங்க விருது, மற்றும் ஆண்டின் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரச்சாரத்திற்கான மெரிட் விருது”.

இந்த பாராட்டுக்கள் இஸ்லாமிய நிதித்துறையில் சிறந்து விளங்குவதற்கும் புத்தாக்கத்திற்கும் யுகுடீரு காண்பிக்கும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.




இந்த விருதானது அதன் பயணத்தில் ஒரு மைல்க்கல்லாகக் கருதப்படுகிறது. இஸ்லாமிய நிதிக் கொள்கைகளை நிலைநிறுத்துவதில் அதன் அர்ப்பணிப்பு, வெற்றிகரமான வணிக விரிவாக்கம், அதன் மக்கள் மற்றும் குழுவில் மூலோபாய முதலீடுகள், சிறந்த வாடிக்கையாளர் சேவைக்கான அர்ப்பணிப்பு, நெறிமுறை மற்றும் ஷரியா-இணக்க நடைமுறைகளை உறுதி செய்தல், அதன் வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் விரிவான வரிசை என்பன இவ்வெற்றிக்கான முக்கிய காரணிகளாகும்.